# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 35/மா/2018

ஆணை எண். 38/2018

நாள் : 28/02/2018

திரு R. மாரியப்பன்,
திண்டுக்கல். – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல், நெட்டுத் தெரு, 155, முனிசிபல் காலனி முகவரியில் வசிக்கும் திரு R. மாரியப்பன் அவர்களின் 19.02.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 23.02.2018 அன்று பெறப்பட்டு, 35/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல், நெட்டுத் தெரு, 155, முனிசிபல் காலனி முகவரியில் வசிக்கும் திரு R. மாரியப்பன் என்பவர் தனது தாயார் திருமதி சீனியம்மாள், திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி வந்த நிலையில் 30.04.2003 அன்று காலமாகிவிட்டாரென்றும், அவரது பணப்பயன்களை பெறும் பொருட்டு வாரிசுதாரரான தனது பெயரை மாநகராட்சிப் பணியாளராகப் பணியாற்றிய தனது தாயார் அவர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டுமென்றும், மாநகராட்சி நிர்வாகம் இதனை காலம் கடத்துகிறது என்று தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை சம்பந்தமாக திண்டுக்கல் மாநகராட்சி உரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. இது சம்பந்தமாக திண்டுக்கல் மாநகராட்சி பொது தகவல் அலுவலரால் 10.01.2018 நாளிட்ட கடித எண். 10905/2017/எச் 2–இல் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மாநகராட்சி துப்புரவுப் பணியாளரும், மனுதாரரின் தாயாருமான திருமதி

சீனியம்மாள் காலமாகி சுமார் 15 ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்பணியாளருக்கான பணப்பயன்களை பெறுவதற்கு அவரது வாரிசுதாரரான மனுதாரர் முயற்சி செய்து வருகிறார். எனவே, இனியும் காலம் கடத்தாது நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்பின் அடிப்படையில் சட்டரீதியான செல்லத்தக்க வாரிசுதாரர் பெயரை சம்பந்தப்பட்ட அலுவலரின் பணிப்பதிவேட்டில் உரிய சான்றிதழ்களின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2018– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கைவொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.**

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **மாநகராட்சி ஆணையர்,**
   **திண்டுக்கல் மாநகராட்சி,**
   **திண்டுக்கல்.**

2. **திரு R. மாரியப்பன்,**
   **155, முனிசிபல் காலனி,**
   **நெட்டுத் தெரு,**
   **திண்டுக்கல்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
**இ.கோ. / உதிரிகள்**